www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தில்....

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## EPRLF IN EELAM STRUGGLE

நீளமானதும், கடினமானதுமான ஈழப்போராட்டத்தின் புரட்சிகர அத்தியாயங்களை தனது உறுதி வாய்ந்த போராட்ட முன்னெடுப்புக்களால் எழுதிவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எதிரான பொய்ப்பிரச்சாரங்களும், கொச்சைப்படுத்தல்களும் வெகு தாராளமாகவே சமீபகாலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஈழப்போராட்டம் முனைப்படைந்திருக்கும் இக்கால கட்டத்திலே போராட்ட நீரோட்டத்தோடு தம்மை இணைக்க முன்வந்துள்ள ஆயிரம் ஆயிரம் மக்கள் எங்கே சரியான தலைமையை இனங்கண்டு ஒரு புரட்சிகர கட்சியின் கீழ் அணிதிரண்டு விடுவார்களோ என்ற அச்சத்தில் வலிகண்டுள்ள பிற்போக்குச் சக்திகளும், குட்டி முதலாளித்துவக் கும்பல்களும் ஒன்றிணைந்தே இந்தப் பிரகடனப்படுத்தப்படாத பிரச்சார யுத்தத்தை எம்மீது தொடுத்துள்ளனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் எமது பாசமிகு மக்களுக்கு நாம் கூறுவது........ போராட்டத்தை திசைதிருப்ப முயலும் இந்தச் சதிகளுக்குப் பலியாகவேண்டாம். போராட்டத்தின் கடினத்தையும்,...... எமது பொது எதிரியின் வலிமையையும்,...... அவனது சர்வதேசக் கூட்டின் பலத்தையும் புரிந்து கொள்ளுங்கள். விடியலை நோக்கி போராட்டம் தள்ளப்படுகையில், வெறித்தனமாக எழுகின்ற இந்த தற்காலிக கூச்சல்களை அலட்சியம் செய்யுங்கள். விடுதலையை விரைந்துபெற வெற்றியை நோக்கிப் போராடும் மகத்தான எங்கள் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள். போராட்ட நீரோட்டத்தோடு உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். வெற்றிவரை போராடுவோம்.

இறுதி வெற்றி ஈழமக்களுக்கே!

EELAM PEOPLE'S INFORMATION CENTRE
Branch]
10, Rue des Martyrs — 75009 PARIS
France

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்

# ஈழம் தபால் சேவை நேற்று சம்பிரதாயபூர்வ ஆரம்பம்

## முத்திரையின் உருவப்படம் சிறுமிஒருவரால் திரைநீக்கம்

(அலுவலக நிருபர்)

**ஈழம் தபால் சேவை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) ஆரம்பித்து வைத்தது.**

நாவலர் கலாசார மண்டபம் நேற்று வாழை, மகர தோரணங்களாலும் நட்சத்திரம் நடுவில் பொறிக்கப்பட்ட சிவப்புநிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

சிறுவர் - சிறுமியர் உட்பட நடுத்தர வயதுடைய ஆண்களும் பெண்களுமாக ஏராளமானோர் கலந்து கொண்டனர் மண்டபம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது.

நேற்றுக்காலை 10 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் ஆரம்பமானது சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது.

நாதஸ்வரக்கச்சேரி முடிவுற்றதும் தமிழீழ விடுதலைக்காகப் போராடி மரித்த போராளிகளுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய பிரதிநிதி திரு. டேவிட்சன் தலைமையில் ஆரம்பமான இவ் விழாவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளட்), தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) தமிழ் மகளிர் அவை, இலங்கை ஆசிரியர் சங்கம், சட்டத்தரணிகள் சங்கம். யாழ் பல்கலைக்கழக கலாசாரமன்றம், யாழ் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

முத்திரை ஒன்றினைப் பிரதிபலிக்கும் பெரிய அளவிலான உருவப்படத்தை ஒரு சிறுமி திரைநீக்கம் செய்துவைத்தார்.

இத்தபால் சேவை தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

"ஈழம் தபால் சேவையானது முதலில் புவியியல் ரீதியாக வரையறை செய்யப்படும் யாழ் குடாநாட்டு எல்லைக்குள் தன்சேவையை ஆரம்பிக்கும்.

"இச்சேவையானது இம்மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சட்டபூர்வமாக அமுலுக்கு வரும். இந்நாள் முதல் யாழ். குடாநாட்டுக்குள் நடைபெறும் தபால் பரிமாற்றங்களுக்கு ஈழம் தபால் தலைகளையும், ஈழம் தபால் அட்டைகளையுமே உபயோகித்தல் வேண்டும். இதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசின் (75 சத) தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்களோ ஸ்ரீ லங்கா தபால் அட்டைகளோ பரிமாற்றம் செய்யப்படமாட்டாது இவை செல்லுபடி அற்றவை ஆகும்.

ஈழம் தபால் தலை ஒன்றின் விலை 50 சதம் ஆகவும், ஈழம் தபால் அட்டை சதம் 50 சதம் ஆகவும் இருக்கும் இவற்றை விலை கூட்டி விற்பது தண்டனைக்குரிய குற்றமாகும்

'இத்தபால் பரிமாற்றத்திற்கு வழக்கமான தபால் மேலுறைகளையும், தபால் பெட்டிகளையும் பயன்படுத்தலாம்.

'பொதுமக்களுக்கு கால தாமதமோ, வேறு இடையூறுகளோ ஏற்படாவண்ணம் அன்றுடம் சிறந்த தபால் பரிமாற்றத்தை "ஈழம் தபால் சேவை" வழங்கும்.

"ஈழம் தபால் சேவை தேசிய உணர்வின் வெளிப்பாடாகும்.

தேச நிர்மாணப் பணியில் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டியது ஒவ்வொரு ஈழத்துப் பிரஜையினதும் அத்தியாவசியகடமையாகும்"

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "திருமலை துறைமுகத் தாக்குதல் அரசின் பொருளாதாரத்தை அழிக்கும் நடவடிக்கையே"

## ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், ஞாயிறு.

''திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் 'மட்கோவ்' பிரிவின் மீது இம்மாதம் 6ம் திகதி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினால் மேற்கொள்ளப்பட்டது'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இத்தாக்குதல் ஸ்ரீலங்கா அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அழிவுத்தாக்குதலாகும். இத்தாக்குதலால் அரசிற்கு 2 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்தாக்குதலின்போது இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான பல படகுகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. அத்துடன் இத்தாக்குதலின்போது சில ஆயுதங்களும், பெருந்தொகையான தோட்டாக்களும் சக்தி மிக்க தொலை தொடர்பு சாதனங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

''இதன்போது எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை இத்தாக்குதலின்போது எம்மால் சிறைபிடிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்குதல் பூர்த்தியானவுடன் விடுவிக்கப்பட்டனர்.''

[ரா-இ]

# நேரடி மோதலில் இராணுவத்தினர் பலர் பலி!

## ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், வெள்ளி

வசாவிளான் இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வந்தபோது தமது மக்கள்விடுதலைப் படையினர் எதிர்கொண்டு தாக்கியதில் 14க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணிவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்று பகல் வசாவிளான் இராணுவமுகாமிலிருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் வெளியேறியபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் கடுமையாகப் போராடி சிறீலங்காப்படைகளை தாக்கினர்.

''மக்கள் விடுதலைப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் நாலு இராணுவத்தினரும், S S-85ரக மோட்டார் தாக்குதலில் 10றருமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்

''கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடலங்களை ஹெலிகொப்டர்களில் வந்த இராணுவத்தினர் மீட்டுச்சென்றனர்.

''மீண்டும் 2 மணியளவில் இராணுவத்தினர் வெளியேறியபோது வீரமுடன்போராடிய மக்கள் விடுதலைப்படைத் தோழர் பவன் [அந்தோனிதாஸ் திருகோணமலை] வீரமரணமடைந்தார். தோழர் பவனின் சடலத்தை மக்கள் விடுதலைப்படையினர் மீட்டு இராணுவ மரியாதையுடன் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்தனர்''.

(மா)

6-9-88

# சிவப்புவர்ணத்தில் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள்

யாழ்ப்பாணம், சனி

வெளியிடப்பட்டுள்ள ஈழம் முத்திரையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் சிவப்பு வர்ணத்தால் இடப்பட்டுள்ளது.

'ஈழம்' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும், முத்திரையின் அடிப்பகுதியில் 'ஈழ விடுதலைப்போராட்டம் வெல்க' என்று தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளது மேலும் பனைமரமும் சூரியோதயமும் இம்முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாசாரமண்டபத்தில் நேற்று இம்முத்திரை விற்பனைக்கு விடப்பட்டபோது பெருந்திரளானோர் வாங்கிச் சென்றனர். அதேசமயம் யாழ் குடாநாடெங்கும் ஈழம் முத்திரை விற்பனை செய்யப்பட்டது.

[மா]

பாசமிகு மக்களே!

ஈழப்போராட்டத்தை வென்றெடுப்பதற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கரங்களைப் பலப்படுத்துங்கள். உங்கள் அனைத்து ஆதரவையும் வாரி வழங்குங்கள்.

www.tamilarangam.net



# "ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு மக்களை பிளவு படுத்தி வருகிறது"

## போராளிகளிடம் சரணடைந்த சிப்பாய்கள் பேட்டி

கிளிநொச்சி, செவ்.

''வடபகுதியில் சிறு கூட்டமொன்று அரசுடன் மோதிக் கொண்டிருப்பதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் நாங்கள் இங்கு வந்ததும் தான உரிமைக்காகப் போராடும் மக்கள் போராட்டம் நடைபெறுவதனைத் தெரிந்து கொண்டோம்.'' என்று அண்மையில் ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறி தமிழ்ப் போராளிகளிடம் சரணடைந்த இரு இராணுவ சிப்பாய்களும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தனர்.

முரசுமோட்டையில் நடைபெற்ற இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஒழுங்கு செய்திருந்தன.

எச். எம். பிரேமரத்தின [22 வயது], டி. எம். எஸ். மங்கள [22 வயது] ஆகிய இரு சிப்பாய்களும் இந்தப் பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் ''இராணுவத்தில் சேர்ந்தால் சொர்க்கத்தை அனுபவிக்கலாம். சுகபோகத்தை அனுபவிக்கலாம். உயர் பதவிகளைப் பெறலாம என்ற நப்பாசையில்தான் நாங்கள் இருவரும் ஒன்றாக இராணுவததில் சேர்ந்தோம், உறவினரான நாங்கள் இருவரும் ''இப்பாகமுவ'' என்னும் கிராமத்தைச் சொந்தவர்கள்.

''இன்றைய ஸ்ரீலங்கா அரசு மக்களைத் திட்டமிட்டுப் பிளவுபடுத்தி வருகிறது, அநுராதபுரத்தில் சிங்களவர் கொலை செய்யப்பட்டபோது இந்த அரசால் ஒன்றும் செய்ய முடியாத நிலை உருவாகியது இக் கொலைகளைப் பார்த்து அரசு கண்மூடிக் கொண்டிருந்தது.''

வடக்கில் இராணுவ முகாம்களில் உள்ள சிப்பாய்களுக்கு விடுமுறை கிடையாது. இவர்கள் பத்திரிகைகள், வானொலி ரி.வி. பார்க்கமுடியாது. அந்த அளவிற்கு எமக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தோம்,''

''வடபகுதியில் இராணுவத்தில் உள்ளோருக்கு லீவு கிடைக்காமைக்குக் காரணம் அவர்கள் விடுமுறையில் லீவில் சென்றால் தென்னிலங்கை போனதும் தலைமறைவாகி விடுவதுதான்.''

கடந்த 28ம் திகதி இரவு ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு நாங்கள் இருவரும் காற்றுவாங்க வந்தோம் சாறமும் சேட்டும் அணிந்த நிலையில் வெளியேறி பல மைல்கள் நடந்து அன்றைய இரவை இரணமடு காட்டுக்குள் கழித்தோம். பின்னர் புளொட் இயக்கத்தில் சரணடைந்தோம். பின்னர் சகல 'இயக்கமும் எம்மைச் சந்திக்க வழி செய்யப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். எனப்படும் இயக்கமும் புளொட்டும் எமக்குப் பாதுகாப்பளித்து காப்பாற்றினார்கள். இவர்கள் எம்மை நல்ல முறையில் கவனிக்கிறார்கள்.

இப்போது தமிழர்கள் மீது கொண்ட தப்பெண்ணம் நீங்கிவிட்டது. போராளிகள் மீது கொண்ட வெறுப்பு மாறிவிட்டது.

நாங்கள் இராணுவ முகாம்களில் சென்றிக்கே நிறுத்தப்பட்டோம். முகாமிற்குள் நடப்பது எமக்குத் தெரியாது இராணுவ அதிகாரிகள் நல்ல வசதியாக வாழ்கின்றனர். ரீ 50 எனப்படும் துப்பாக்கிகளே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டன.

இருவரும் ஐந்து மாதத்திற்கு முன்பு அனுராதபுரத்திலிருந்து நடைபவனியாக இங்கு வந்தோம் இக்காலத்தில் மண்டைதீவு கோட்டை முகாம்களில் சென்றிக்கு நிறுத்தப்பட்டோம். (ஒ)

# 'துப்பாக்கி, தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன'

## ஈ. பி. ஆர் எல்.

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியிலுள்ள தந்திரிமலைக் கிராமததை சுற்றி வளைத்தமது மக்கள் விடுதலைப் படையினர் பல ஊர்காவல் படையினரைப் பிடித்து அவர்களி[...] இரு துப்பாக்கிகளும் [...]டாக்களும் கைப்பற்[...] விடுவித்துள்ளதாக ஈழ[...] புரட்சிகர விடுதலை மு[...] விடுத்துள்ள அறி[...] தெரிவிக்கப்பட்டுள்ளது[...]

அவ்வறிக்கையில் [...] தெரிவிக்கப்பட்டுள்ளது[...] கடந்[...]ம் திகதி இர[...] காவற்படையினர் எ[...] கைதுசெய்யப்பட்டனர்[...] களிடமிருந்து இரு துப்[...] களும் தோட்டாக்களு[...] முதல் செய்யப்ப[...] எச்சரிக்கை செய்யப்ப[...] தலை செய்யப்பட்டனர்[...] சம்பவத்தின் போது [...] விடம் வந்த இராணு[...] டன் மக்கள் விடுதலை[...] வீரர்கள் ஒன்றரை மணி[...] நேரடி மோதலில் ஈ[...] னர். இச்சம்பவ[...] போது எமது தரப்பி[...] வித சேதமும் இல்லை[...]

கோட்டையிலிருந்து

# வெளியேவந்த ராணுவம் மீது

## தாக்குதல்: சிலர் பலி, பலர் காயம்!

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

'கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேற முயற்சித்த ராணுவத்தினரை எதிர்கொண்டு மக்கள் விடுதலைப்படை (பி. எல். ஏ.,வீரர்களும் சக இயக்கப் போராளிகளும் நடத்திய தாக்குதலால் இராணுவத்தினர் பின் வாங்கி முகாமிற்கு சென்றனர்' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) நேற்றுவிடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரணிலிருந்தும், வேறு திசைகளில் இருந்தும் மக்கள் விடுதலைப் படையினர் வெளியேற முற்பட்ட படைகள் மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலால் படையினரில் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பலர் காயமடைந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது' (ஒ)

கந்தசக் கா[...]
சுவாசித்தபடி[...]
கவிஞர்களா[...]
கரங்களில்
தாங்கிய
எங்களின்
மகத்தான
தோழர்களே[...]
போராடுவ[...]
தங்களுக்[...]
இல்லை
ஈ.ழ மக்க[...]
என்பதை
மனதில்
பதியுங்கள்[...]

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல அரசாங்கம்தான் எதிரி

## புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டாக அறிக்கை

கிளிநொச்சி, திங். 'சாதாரண சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல அரசுதான் எமது எதிரி. நாம் மக்களுக்கெதிராக ஆயுதம் தூக்கமாட்டோம் இராணுவத்திலிருந்து வெளியேறும் எவரையும் காப்பாற்றி பாதுகாப்பாக அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைப்போம்.'

இவ்வாறு கிளிநொச்சியில் சரணடைந்த ஆனையிறவு இராணுவமுகாம் சிப்பாய்கள் தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கூட்டாக கிளிநொச்சியில் வைத்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அக்கூட்டறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'இராணுவ முகாமில் இருந்து வெளியேறுவோர் உண்மையில் உயிருக்குப் பயந்து தான் வெளியேறுபவராக இருந்தால்தான் பாதுகாப்பு அளிப்போம். நாம் பயங்கரவாதிகள் அல்ல, விடுதலைப் போராளிகள் என்பதை சரணடைந்த இரு சிப்பாய்கள் மூலம் நிரூபித்துள்ளோம். (ஓ)

# மினி சினிமா ஆபாச விளம்பரம் அகற்றப்பட்டது

## மீண்டும் ஒட்டினால் கடும் நடவடிக்கை —ஈ பி ஆர் எல் எவ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாநகரசபைப்பகுதிக்குள் காணப்பட்ட ஆங்கிலப் படங்களுக்கான ஆபாசக் காட்சி விளம்பரங்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று அகற்றியது.

யாழ் மாநகரசபைப்பகுதிக்குள். மினிசினிமா விளம்பரங்களில் ஆபாசமான விளம்பரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதென முன்பு அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை அவைகள் அகற்றப்படாமல் இருந்தன.

நேற்று அவற்றை அகற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மீண்டும் இவ்வாறான ஆபாசக்காட்சி விளம்பரங்கள் ஒட்டப்படுமானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென மினிசினிமா காட்சியாளர்களை எச்சரித்துள்ளனர்.

# வசாவிளான்-முகாம் வாபஸ் அறிவிப்பு: ஈ.பி.ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

"வசாவிளான் ஆயுதப்படை முகாமிலிருந்து வெளியேறி வந்து மக்களை வேட்டையாட படையினர் எடுத்த முயற்சிகள் மக்கள்விடுதலைப்படையினரின் மோட்டர் தாக்குதலாலும் சக இயக்கங்களின் எதிர்த்தாக்குதலாலும் முறியடிக்கப்பட்டன. இதனையடுத்து அங்குள்ள எதிரிப்படைகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுவிட்டது அவர்கள்படையைவிட்டு தப்பியோடாது தடுக்க மீண்டும் அவர்களை பலாலிமுகாமுக்குதிருப்பி அழைக்கும் எண்ணம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வசாவிளான் மகாவித்தியாலயம் மாணவர்கள் நலன் கருதியும், சுற்றுடலில் உள்ள பொதுமக்களின் நலனுக்காகவுமே இராணுவ முகாம் வாபஸ் பெறப்படப்போவதாக மிகவும் தந்திரமாக மக்களை ஏமாற்றும் விதமாக ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி செயற்பட்டுள்ளார். வசாவிளானில் இராணுவமுகாம் அமைக்கப்படும் போது மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை நிராகரித்த அந்நியப் படையினருக்கு இப்போது மட்டும் மக்களின் மீது ஏற்பட்ட திடீர் பாசத்திற்கு காரணம் என்ன? வசாவிளான் சுற்றுடலிலும்பலாலிமுகாமை சமீபித்துள்ள பகுதிகளிலும் வாழ்ந்த மக்களை விரட்டியடித்து சொந்தமண்ணிலேயே நமது மக்களை அகதிகளாக்கிய எதிரிப்படைகள் இப்போது தமது தோல்வியை மறைக்க நாடகமாடுகின்றனர்.

வசாவிளான் இராணுவ முகாம் மோட்டர் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பான இடமல்ல தொடர்ந்து அங்கிருப்பது ஆபத்து என்பதைஎதிரிகள்அறிவர் எனவே அண்மையில்கோட்டைமுகாம் மீதான மக்கள் விடுதப்படையினர் மோட்டர் தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டதுடன் பல படையினர் படுகாயமடைந்தனர் இதனால் எதிர்ப்படைகள் பீதியடைந்தனர் கோட்டை முகாமில் மோட்டர் தாக்குதல் நடத்தப்படும்போது உயிரைக் கையில் பிடித்தபடி எதிரிப்படைகள் பதுங்கிக்கொள்ள வாய்ப்புண்டு

பல்வேறு தந்திரங்கள்மூலம் எமது மக்களைத் திசைதிருப்ப எதிரிகள் தீவிர முயற்சி செய்கின்றனர். மக்கள் விடுதலைப் படையின் மோட்டார்தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது என்பதாலும் திணறியபடி மக்களை திசைதிருப்ப அந்நியப் படையினர் பிரிகேடியர் ஆடிய நாடகம் தான் மக்களைச் சந்தித்து அவர்கள் விருப்பத்துக்காக வாபஸ் ஆகப்போவதான அறிவிப்பு ஆகும் அது மட்டுமல்லாமல் வாபஸ் ஆகப் போவதாக அறிவித்தால் நாம் மோட்டார் தாக்குதலை நடத்தமாட்டோம் அப்படித்தாக்குதல் நடாத்தினால் மாணவர்கள் எதிர்ப்பார்கள் எனவே வாபசாகும்வரை நிம்மதியாக இருக்கலாம் என்பது பிரிகேடியரின் திட்டமாகும். எனவேஎதிரிகளின் சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்காமல் விடுதலை இயக்கங்களுடன் ஒன்றுபட்டு நின்று இறுதி வெற்றிவரை போராடமக்கள் தயாராகவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். (இ)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுப் பிரிவுடனான உங்கள் அனைத்துத் தொடர்புகளுக்கும்....

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYR
75009 - PARIS.

தொலைபேசி: 48-74-98-30.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "மருந்துகள் திருடினால் தண்டனை வழங்கப்படும்"

யாழ்ப்பாணம், வியா.

'யாழ் குடாநாட்டிலுள்ள எந்தவொரு அரசினர் பொது மருத்துவ பணியிலும் மருந்து திருட்டு இடம் பெற்றாலும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்போம் என்று கடுமையாக எச்சரிக்கிறோம்.'

இவ்வாறு 'அவசர மருத்துவ சேவை'யினரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் போதிய அளவு மருந்து உபகரணங்கள் இல்லாமையால் பல நோயாளர்கள் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் இந்நிலைமையை விளக்கி யாழ் குடாநாட்டிலுள்ள அரசினர் பொது மருத்துவ நிலையங்களில் மருந்துகளை திருடவேண்டாம் எனவும் மருந்துகளை திருடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

'இதன் பின்னரும் எமது அறிவித்தலை உதாசீனப் படுத்தி பொறுப்புணர்வற்ற மருத்துவ நிலைய ஊழியர்களும் வெளித்தரகர்களும் தனியார் மருந்து வியாபாரிகள் சிலரும் மருந்து திருட்டிலும் அதற்கு உடந்தையாகவும் இருந்து வருகின்றனர் சில தினங்களுக்கு முன் அவசர மருத்துவ சேவையினராகிய எம்மால் கொடுக்கப்பட்ட தகவலுக்கிணங்க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவினரான மக்கள் விடுதலைப் படையினரால் ஊழியர்களில் மூவரும் தனியார் மருந்து வியாபாரி ஒருவரும் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு மருந்துக் களவு யாழ். குடாநாட்டிலுள்ள எந்த அரசினர் பொது மருத்துவ மனைகளில் நடைபெற்றாலும் நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என மீண்டும் எச்சரிக்கின்றோம் இவ்வாறு மருந்துக் களவில் ஈடுபட்டு எமது தேசத்தின் இன்றைய நிலைமையை புரியாமல் மக்களுக்கு விரோதமாக செயற்படும் சகலருக்கும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சகல விடுதலை ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுகின்றோம்.'' (மா)

# இலங்கை ராணுவ முகாம் சுற்றி வளைப்பு

தினமணி 13.9.86

சென்னை, செப். 11—

இலங்கையில் ஒட்டி சுட்டான் ராணுவ முகாம் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வியாழனன்று வெளியிட்ட அறிக்கை கூறியது.

இம்முகாமிலிருந்து ராணுவத்தினர் வெளியேறி மக்களைத் துன்புறுத்துவதிலிருந்து தடுத்து நிறுத்துவதற்காகவே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், இச்சம்பவத்தின் முதல் நாளன்று ராணுவத்தினர் வெளியேறாது முகாமுக்குள் முடங்கிக் கிடந்தார்கள் என்றும் அந்த அறிக்கை கூறியது.

இரண்டாவது நாளான திங்கட்கிழமை காலை அங்கு வந்த ஹெலிகாப்டர் விமானம் தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தபோது மக்கள் விடுதலைப் படையினர் நவீனத் துப்பாக்கிகளால் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், ஹெலிகாப்டர் பின்வாங்கிச் சென்றது என்றும் அந்த அறிக்கை மேலும் கூறியது. இந்தச் சமயத்தில், ராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அறிக்கை கூறியது.

# Fighting continues in Batticaloa

NEWS TODAY 24-9-86

# Lanka army camps still under siege

Madras, Sept. 20: The People's Liberation Army (PLA), the military wing of the Eelam People's Liberation Front (EPRLF), continued to lay 'siege' to the Kannang-guda military camp in Sri Lanka's Batticaloa district, even as fierce fighting between the PLA and the Sri Lankan army continued according to the Eelam People's Information Centre (EPIC) here.

The EPIC in a press release said Friday despite the 'indiscriminate bombings' by Sri Lankan planes and helicopters on innocent civilians in that area, the PLA had forced the former to retreat and went to the rescue of the Tamils. The PLA had also repulsed the army shelling from the camp and kept them well within their control, the release said.

The EPIC alleged that the Sri Lankan air force during a search operation at Thuvarangkadu, took into custody 35 Tamils and later released all but 14 of them after having 'subjected them to torture'.

While one fisherman was killed, two others who had accompanied him for fishing escaped with minor injuries, when Sri Lankan army personnel fired from the Jaffna fort camp, the EPIC added.

EPIC said that over 250 plantation Tamils struck work at Thalavakkolai in Central Sri Lanka, following the detention and interrogation of a Tamil youth by the Sri Lankan police.

The striking workers demanded immediate release of the youth and that the police should stop detaining Tamil youths, the release added.

## Army men on rampage

The Tamil Information Centre in Madurai said Sri Lankan commando and air force men enraged by the car-bomb explosion in which 12 army personnel were killed, made even preiests and mentally retarded men their targets.

S. Thirunavukarasu, a mentally retarded person was killed near the Batticola air-force base by the airforcemen Thursday.

Besides one car, a van, three houses and six shops were completely burnt. Two other vehicles were badly damaged. The commandos also killed a fisherman in Kallady in Batticola district. The toll in the by the defence personnel at different part of Batticola rose to 49.

The Sri Lankan police commandos also fired at the ·Tamils who were participating in a Ganesh festival, injuring 3 Tamils seriously. The commandos burnt the body of a priest, who was killed. Another christian priest was also seriously injured, in the firing.

## Probe urged demanded

The Batticaloa Citizen's Committee has urged President Jayawardene and National Security Minister Lalith Athulathmudali to hold an inquiry into what it called "indiscriminate firing and killing of civilians by the police", following the car bomb blast in Batticaloa town Thursday.

A spokesman of the committee said that the request for the inquiry had been made through cables sent to Jayawardene and Athulathmudali.

The committee has alleged that at least 11 civilians had been killed in the police firing.

Committee spokesman Sam Tambimuttu said that soon after tle blast police commandos drove through the streets of Batticaloa shooting and killing civilians indiscriminately and setting fire to several houses.

"Only two people were killed by the bomb, the other 11 were shot dead by police. Airforce helicopters strafed some parts of the town in the two-hour operation", he said.

Tilak Ratnakar, head of the state-run media centre, denied the charge, saying the civilians were killed either by the car bomb or in a shootout between police and Tamil extremists.

# 3 ராணுவத்தினர் சாவு

செவ்வாயன்று மாங்குளம் ராணுவ முகாம் மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலை படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தியதில் மூன்று ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இருபதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த குலேந்திரன் எனப்படும் சின்னையா யோகராஜா என்பவரும் இத்தாக்குதலின்போது இறந்தார். படுகாயமடைந்த ராணுவத்தினர் அனுராதபுரம் மருத்துவமனைக்கு அவசரம் அவசரமாக கொண்டு செல்லப்பட்டனர்.

EPIC தரும் ஈழச் செய்திகளை தொலைபேசி மூலம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்...

48-74-60-43.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராளிகள் வைத்த

# கண்ணி வெடியில் சிக்கி 6 சிங்கள போலீசார் சாவு

10
ஈழநாடு
13.9.86

## தமிழ் கிராமத்தை தாக்கும் திட்டம் முறியடிக்கப்பட்டது

சென்னை, செப். 18— தமிழ் கிராமத்தை சுற்றி வளைத்து தாக்கு தல் நடத்த முயன்ற சிங்கள போலீசார் மீது ஈழப்போராளிகள் கண்ணி வெடி தாக்குதல் நடத்தி னார்கள்.

இதில் 6 சிங்கள போலீசார் அந்த இடத்தி லேயே கொல்லப்பட்ட னர்.

இலங்கை மட்டக் களப்பு கல்முனை வீதியில் புதுக் குடியிருப்பு என்ற தமிழ் கிராமம் இருக் கிறது.

இக்கிராமத்தை சுற்றி வளைத்து தாக்குவதற் காக சிங்கள போலீஸ் அதிரடிப் படையினர் ஒரு ஜீப்பில் சென்று கொண் டிருந்தனர்.

மக்கள் விடுதலைப் படையினர் அவர்கள் மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் "மக்கள் விடுதலைப் படையினர்" கண்ணி வெடி தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

போராளிகளின் இந்தக் கண்ணி வெடியில் சிக்கிய சிங்கள போலீஸ் ஜீப் வெடித்துச் சிதறி முழுவது மாக சேதம் அடைந்தது.

இதில் 6 சிங்கள அதிரடிப் படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படு காயம் அடைந்தனர்.

இச்செய்தியை ஈழ மக்கள் புரட்சி விடுதலை முன்னணி நேற்று சென்னை யில் தெரிவித்தது.

# 8-வது நாளாக போர்!

20.9.86
ஈழநாடு

## மட்டக்களப்பில் !!

சென்னை, செப். 20— மட்டக்களப்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி படைக்கும், சிங்கள ராணு வத்துக்கும் இடையே நேற்று 8—வது நாளாக கடும் சண்டை நடந்தது.

கன்னங்குடா ராணுவ முகாமை விட்டு ராணுவத் தினர் வெளிவராதபடி விடுதலை படையினர் தடுத்த தால் கொழும்பில் இருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் ஹெலிகாப்டர்கள், விமா னங்கள் வந்து அப்பாவி மக்கள் மீது குண்டு வீசின.

இதை விடுதலை படை யினர் முறியடித்து மக்களை காப்பாற்றினார்கள். முகாமை விட்டு ராணுவத் தினர் வெளிவராதபடி விடு தலை படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து உள்ளனர். ராணுவத்தி னின் பீரங்கி தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள்.

THE HINDU

# Commandos can't escape our siege: EPRLF

24-9-86

MADRAS, Sept. 23.

The 10-day-old siege laid by the Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) to the Sri Lankan Special Task Force's camp at Thoonadi in the eastern Batticaloa district is still on and the STF personnel either have to "withdraw or surrender", according to EPRLF.

Addressing a press conference here today, Mr. Krupa of EPRLF, said his organisation was in the forefront of the counter-offensive against the armed forces in Batticaloa. It attacked a newly established STF camp consisting of 300 commandos at Thoonadi between Vavunatheevu and Kannanguda villages on September 13 and blasted three bridges leading to the camp. On September 14, a helicopter which tried to supply food to the beleaguered commandos was also fired at and damaged. It could not land at the camp.

LTTE and EROS also joined EPRLF by posting their sentries round the camp. The commandos tried to come out of their camp on September 17 but they were attacked by EPRLF men and forced to retreat to the barracks. The camp was still under siege.

**47 Tamils killed:** Mr. Krupa said 47 innocent Tamil civilians were shot dead by the police commandos in Batticaloa following the bomb blast in a car on September 18, killing four commandos. The bodies of 19 Tamils were found behind the Rajeswara cinema. A priest belonging to St. Antony's Church was also a victim and shops and houses on St. Antony's Road were destroyed by the commandos. The six-day hartal from September 21 called by all the Tamil militant organisation to protest against the killings entered the third day on Tuesday.

The island Government had imposed a curfew in the district to break the hartal and the aerial bombing of civilian areas in Batticaloa town began after the National Security Minister, Mr. Lalith Athulathmudali, reached there on September 14, he said. Civilians numbering 15,000 had fled to the jungles after the bombings.

He accused the Sri Lankan Government of trying to sow seeds of discord between the Tamils and Muslims in the district. The Government had helped form a "Jihad" force against the Tamils and its members were given initial training in Pakistan. Some Muslim youths were also trained at Gurunagalle, 80 km from Colombo.

**Fast unto death in Welikade prison:** Mr. L. Ketheeswaran said the Tamil political prisoners in Welikade prison in Colombo had proclaimed the week from September 23 as the 'week of boycott' of all judicial courts to express their opposition to the "brutal methods" adopted by the Sri Lankan Government on the Tamils rounded up in "cordon and search" operations and detained at the Boosa camp. Ten political prisoners at the prison were on a fast unto death

# Fighting continues in Batticaloa

INDIAN EXPRESS
20-9-86

By Our Staff Reporter

Fighting between guerillas of People's Liberation Army (PLA) and Sri Lankan armed forces continued for the 8th day in parts of Batticaloa on Thursday, the Eelam People's Information Centre (EPIC) said in a press release.

The PLA, military wing of the EPRLF, had launched attacks on Kananguda and Paduvankarai army camps, to prevent troops from shelling villages nearby.

On Thursday, a fisherman in Jaffna was killed when troops fired from the Jaffna Fort Army Camp. Two escaped with minor injuries.

Also, 250 plantation workers had launched a strike to protest the arrest at Thalavakalai of a Tamil youth, on charges of suspicion by police.

At Trincomalee in the East, troops tortured 35 Tamil youths at Thuvarankadu, and released 21 of them, according to the press release.

நவீனரக ஆயுதங்களுடன்
நம் இனிய தேசத்தை விழுங்கவரும்
நவபாசிச எதிரியை
முறியடிக்கப் போராடும்
நமது போராளிகளின்
கரங்களைப் பலப்படுத்த வேண்டியது
நமது வரலாற்றுக் கடமையல்லவா?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ குண்டு வைத்து பாலம் தகர்ப்பு

★ கட்டிடங்கள் இடிந்து தரைமட்டம்

★ சிங்கள அதிரடிப்படையினர் பலர் பலி

# பல்வேறு முகாம் மீது நள்ளிரவில் நடந்த பீரங்கி தாக்குதல்

மக்கள் குரல் 15.9.86

## போராளிகள் நடத்திய ஆவேச போர்

சென்னை, செப். 15: மட்டக்களப்பில் சிங்கள அதிரடிப் படை முகாமை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலை படையினர் பீரங்கி தாக்குதல் நடத்தி தகர்த்தனர்.

இதில் அதிரடிப்படையினர் பலர் பலியானார்கள். பாலம் ஒன்றும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. நேற்று முன் தினம் இரவு இந்த தாக்குதல் நடந்தது.

மட்டக்களப்பில் போலீஸ் அதிரடிப்படை மற்றும் தேசிய உளவுப் பிரிவின் கூட்டு முகாம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு மக்கள் விடுதலைப் படையினர் பீரங்கி தாக்குதல் நடத்தினர். சக்திவாய்ந்த பீரங்கிகள் இதில் பயன்படுத்தப்பட்டன. பீரங்கி தாக்குதலில் முகாமின் ஒரு கட்டிடம் முழுமையாக அழிக்கப்பட்டது. மற்ற கட்டிடங்கள் மிகவும் சேதமடைந்தன.

மட்டக்களப்ப மாவட்டத்தில் வவுனித்தீவில் போலீஸ் அதிரடிப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது அதிரடிப்படையினர் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினர் பீரங்கி தாக்குதல் நடத்தி சுற்றி வளைத்தனர். அதிரடிப்படையினர் வெளியே வர முடியாது திண்டாடுகிறார்கள். மட்டக்களப்பு கூட்டு முகாமில் இருந்து இந்த முகாம் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே அந்த முகாமில் இருந்து இங்கு எந்த உதவியும் கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இங்கு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதே போல களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் இருந்து புதிய முகாமிற்கு உதவிக்கு வராத வகையில் நேற்று இரவு 1 மணியளவில் பட்டிருப்பு பாலம் மக்கள் விடுதலைப் படையினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. புதிய முகாம் மக்கள் விடுதலைப்படையினரால் தாக்கப்பட்ட பின்னர் தற்போது இந்த முகாமை சுற்றி வளைப்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழப்புரட்சிகர அமைப்பு போன்றவை கூட்டாக பங்கேற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஊர்காவல் துறை கடற்படையினர் இரண்டு விசைப்படகுகளில் வந்திறங்க முற்பட்டனர். அவர்கள் மீது ஈழமக்கள் விடுதலைப்படையினர் கடும் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலையடுத்து பலத்த காயங்களுடன் தரை இறங்க முடியாத நிலையில் கடற்படையினர் தமது விசைப்படகுகளில் பின்வாங்கி ஓட்டம் பிடித்தனர்.

கன்னங்குடா (மட்டக்களப்பு மாவட்டம்) என்னுமிடத்திலுள்ள வவுணித்தீவில் புதிதாக அமைக்கப்பட்ட ராணுவ முகாம் மீது மக்கள் விடுதலைப்படையினர் பீரங்கித்தாக்குதலை நடத்தினர். இந்த நேரடி மோதலின்போது பல ராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். மேலும் இத்தாக்குதலின் போது மக்கள் விடுதலைப்படையின் உறுப்பினரான கார்த்திக் என்று அழைக்கப்படும் வீரக்குட்டி சுந்தரலிங்கம் (வயது 25) வீரமரணம் அடைந்தார்.

## Police commando base attacked in Sri Lanka

THE HINDU MADRAS, Sept. 14.

On Saturday, the military wing of the EPRLF, People's Liberation Army (PLA), attacked the police commando base in Batticaloa town which also houses the regional headquarters of the National Intelligence Bureau, according to an EPRLF spokesman. 15.9.86

In the attack, one building in the base was destroyed totally and other buildings suffered considerable structural damage. Mortars and small arms were used and enemy casualties were high, he said.

The PLA men also laid seige to the new army camp at Vavunithivu in Paddurankarai area, which is a housing colony five km. from Batticaloa.

The initial attack was launched by the EPRLF on September 12. Late on Saturday night, EPRLF cadres blew up the Pattirupu bridge to prevent reinforcements being sent from the Kalavanchikudy army camp. LTTE and EROS have now joined the EPRLF in tightening the seige

## Army camp under siege

The Peoples Liberation Army (PLA), the military wing of the Eelam People'ss Revolutionary Liberation Front (EPRLF), which had laid a siege on the new Sri Lankan 'Army camp at Vavunithivu, about 5 km from Batticaloa town, 12 Sept. blew up the Pattirupu bridge late Saturday night to prevent reinforcements being sent from the Kalawanchikudi army camp, according to an EPRLFa Press release

The release said, two other militant groups including the Liberation Tigers of Tamil Eelam (LTTE) have now joined the PLA in 'tightening the siege' around this new army camp. NEWS TODAY

The PLA had also launched an attack on the police commando base which also houses the regional quarters of the national intelligence bureau, at Batticaloa town Sunday, the EPRLF said. One building in the premises was 'totally destroyed' and several others were badly damaged in the assault which involved the use of mortars, the release said.

Two Sri Lankan navy patrol boats were also fired at by the PLA, causing serious injury to the personnel on board, the release added.

In another incident, 3 persons were killed Sunday when flashlights rigged with bombs exploded in the northern district on Anuradhapura, an official statement said.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்